# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.140/2022 | Date | : 27.01.2025 |
| Deposition of Witness for | : அ.சா.4 | Taluk | : சங்ககிரி |
| Name | : ஜெயபால் | Calling | : டிரான்ஸ்போர்ட் |
| Father Name | : கந்தசாமி | Religion | : இந்து |
| Village | : அக்கமாபேட்டை | Age | : - |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 27.01.2025.

(எதிரி ஆஜர், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், அக்கமாபேட்டை கிருஷ்ணா நகரில் வசித்து டிரான்ஸ்போர்ட் தொழில் செய்து வருகிறேன். கடந்த 16-07-2020 ம் தேதி, காலை சுமார் 08.00 முதல் 09.00 மணியளவில் நான் எங்கள் ஊரில் என்னுடைய வீட்டிற்கு எதிரே இருந்தபோது, அங்கே வேலை செய்த தமிழரசன் என்பவரும், முருகேசன் என்பவரும் சண்டைபோட்டுகொண்டார்கள். நான் பின்னால் இருந்தேன். கட்டையால் அடித்துகொண்டதாக கேள்விப்பட்டேன். பின்னர், மதியம் சுமார் 01.00 மணிளவில் சங்ககிரி போலிசார் அங்கு வந்து என்ன நடந்தது என்று விசாரித்தார்கள். நான் அடிதடி சண்டைபோட்டுகொண்டதாக சொன்னேன்.

2) பின்னர், போலிசார் சம்பவ இடத்தில் மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தனர். பார்வை மகஜரில் நானும், சிவக்குமாரும் சாட்சி கையொப்பம்

செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். 2வது சாட்சி கையொப்பம் சிவக்குமார் என்பவருடையது ஆகும். ( **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3) பின்னர், போலிசார் அன்றைய தினம், மதியம் சுமார் 02.00 மணியளவில் சம்பவ இடத்தில் இருந்த உருட்டு கட்டையை போலிசார் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார்கள் அதில் நானும், சிவக்குமார் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். 2வது சாட்சி கையொப்பம் சிவக்குமார் என்பவருடையது ஆகும். ( **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). அந்த உருட்டு கட்டையை பார்த்தால் தற்போது என்னால் அடையாளம் காண்பிக்க முடியும். தற்போது, என்னிடம் காட்டப்படும் உருட்டு கட்டையை தான் (அ.சா.பொ.1) போலிசார் எங்கள் முன்னால் கைப்பற்றினார்கள். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :-

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.

Sd/-S.R.Babu

Sd/-Jayabal

Judicial Magistrate No.1,
Sankari.